## நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டம் - 2017

நீர் வழங்கல் மற்றும் சுகாதார முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 நவம்பர் 06 ஆந் திகதிய 5685 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பட்டோலை II இன் II (சீ) (3) ஆம் பிரிவு மற்றும் 2010 யூலை 31 ஆந் திகதிய சர்வதேச அவிவிருத்தி சங்கத்தின் கடன்கள் மற்றும் மானியங்களின் பொது நிபந்தனைகளின் 4.09(ஆ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. தெரிவுசெய்யப்பட்ட மாவட்டங்களில் தண்ணீர் சேவைகள் குழாயிடுவதற்கான அணுகுவழிகள் மற்றும் முன்னேற்றப்பட்ட சுகாதாரம் என்பவற்றினை அதிகரித்தலும் ஒன்றிணைந்த நிறுவனங்களின் இயலளவை வலுப்படுத்துவதும் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 27,590 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 183.90 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 24,750 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2015 திசெம்பர் 07 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட

கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சொத்துக்களை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காக கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்தான செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கிணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கான ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ள முடிந்திருந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை அரசாங்கத்தால் செலுத்தப்பட்ட ரூபா 69.15 மில்லியன் தொகையான கடன் வட்டி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பின் கீழ் காட்டுதற்குப் பதிலாக வெளிநாட்டு கடனின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 2017 திசெம்பர் 31 இல் உள்வாறு செய்யப்பட்ட ரூபா 6,812.31 மில்லியன் தொகையான கைதவிப்பகள் அந் திகதியில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 6,738.86 மில்லியன் நேரொத்த மீதியுடன் உடன்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய ரூபா 2.66 மில்லியன் கூட்டு மொத்த தொயையான பெருந்தோட்ட மனித அபிவிருத்தியின் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் படிகள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) தலிகமவில் குழாய்கள் குழாயிடலில் சாத்தியமானளவு சேதங்களில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் செய்யப்பட்ட ரூபா 1.79 மில்லியன் தொகையான மீளளிக்ககூடிய வைப்பகள் செயற்திட்டத்தால் செய்யப்பட்ட வைப்புக்களாக காட்டுவதற்குப் பதிலாக அபிவிருத்தி செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) முல்லைத்தீவில் செப்ரெஜ் சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்தில் ஈடுபடுத்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு செய்யப்பட்ட ரூபா 14.80 மில்லியன் தொகையான முற்பணங்கள் ஒப்பந்தகாரர்களிற்கு செய்யப்பட்ட முற்பணங்களின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம், செயற்திட்டமானது சொத்துக்களின் நட்டங்களை பதிவதற்கு புறம்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆகஸ்ட் 29 ஆந்திகதிய டிஎம்எஸ்/7777/டபிள்யூஎஸ்எஸ்ஜபி ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம், ஒப்பந்த அடிப்படையில் 04 ஆண்டுகளில் 03 நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்ட 02 உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2016 மார்ச் 24 ஆந்திகதிய 01/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக, பகுதி நேர அடிப்படையில் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தனர்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | நிதியளிப்பு உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கன பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 165.00 | 24,750 | 3,500 | 20.76 | 3,114 | 23.70 | 3,554.14 |
| இலங்கை அரசாங்கம் | 5.00 | 750 | 75 | 0.46 | 69 | 0.72 | 108.59 |
| சமுதாய பங்களிப்பு | 13.90 | 2,090 | - | - | - | - | - |
| **மொத்தம்** | **183.90** | **27,590** | **3,575** | **21.22** | **3,183** | **24.42** | **3,662.73** |

பாதீட்டு மதிப்பீட்டில் துறைரீதியான தொழில்நுட்ப உதவிகளின் கீழ் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 200 மில்லியன் மற்றும் ரூபா 300 மில்லியன் தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அவற்றில் எவ்வித வடவடிக்கைகளும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால், முழு ஒதுக்கீடுகளும் செலவழிக்கப்படாது இருந்தது. மேலும், நகர சுகாதாரத்திற்கான நீர்த்தேக்க சுத்திகரிப்பு முறைமையின் முன்னேற்றம், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்திற்கான நிறுவன ரீதியான ஆதரவுகள் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தின் இயலளவைக் கட்டியொழுப்புதல் என்பவற்றிற்கான பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 275 மில்லியன் கூட்டுமொத்த தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்ததுடன்எவ்வித நடவடிக்கைகளும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தில் ரூபா 400 மில்லியன் தொகை மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ரூபா 701.22 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்ட ஆவணங்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நகர, கிராம மற்றும் தோட்டத்துறை நீர் வழங்கல் மற்றும் சுகாதார திட்டங்களின் புனரமைப்பு மற்றும் விரிவாக்கம், தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவை வலுப்படுத்தல், பயிற்சி மற்றும் தண்ணீர் தர மதிப்பிடல் ஊடாக துறை இயலளவை கட்டியொழுப்புதல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் என்ற பெயரில் 04 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டன. செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம், இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்களில் செயற்திட்த்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 யூன் 07 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள வெலிப்பொத்தயய நீர் வழங்கல் திட்டத்தின் நடவடிக்கைகள் ஒப்பந்தகாரரின் குறைவான செயலாற்றல் காரணமான 2018 மே 31 இல் உள்ளவாறு 24.20 சதவீதமான மெதுவான பௌதீன முன்னேற்றத்தைக் காட்டியிருந்தது. மேலும், சமுதாய அடிப்படை அமைப்புக்களிற்கான தண்ணீரின் பாவணை, நீர் நிரப்பு நிலையம் மற்றும் நீரிறைக்கும் இயந்திரங்கள் மற்றும் பனல் பலகைகள் போன்றவற்றிற்கான நிர்மாண வேலைகள் திட்டமிடப்பட்டவாறு தொடங்கப்பட்டிருக்காததுடன் குழாய்கள் குழாயிடலில் 50 சதவீதம் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 75.90 மில்லியன் கிரயத்தில் வழங்ப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள தொடுவாக்கொடி நீர் வழங்கல் திட்டத்தின் நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2018 யூன் 10 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், பட்டியலிடப்பட்ட வேலைகளின் பிரகாரம், 9,815 மீற்றர் குழாய்கள் குழாயிடப்பட வேண்டியிருந்ததில், 2018 யூன் 15 இல் உள்ளவாறு 9,173 மீற்றர் குழாய்கள் குழாயிடல் வேலைகள் மாத்திரம் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 78.70 மில்லியன் கிரயத்தில் முல்லைத்தீவில் நீர்த்தேக்க சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்த காலப்பகுதி பட்டியலிடப்பட்ட காலத்திற்குள் வேலைகளை தொடங்குவதற்கு ஒப்பந்தகாரர் தவறியமையால் 2018 யூன் 18 வரை நீடிக்கப்பட்டிருந்ததுடன் 2018 மே 31 இல் உள்ளவாறு அவற்றின் 12 சதவீத பௌதீக முன்னெற்றம் மாத்திரம் அறிக்கையிடப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் வேலைகள் தொடங்குவதிலுள்ள தாமதம் காரணமாக 2018 மே 31 இல் உள்ளவாறு 1 ஆண்டுகளின் பின்னர் ரூபா 14.30 மில்லியன் தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்களை பெற்றிருந்தார் என அவதானிக்கப்பட்டது.

(ஈ) கிளிநொச்சியில் நீர்த்தேக்க சுத்திகரிப்பு பொறியின் நிர்மாணத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்த ரூபா 74.08 மில்லியன் கிரயத்தில் 2017 பெப்ரவரி 17 இலிருந்து தொடங்கி 09 மாத காலத்திற்காக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் ஒப்பந்த காலப்பகுதிக்குள் நிர்மாண வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு தவறியிருந்ததுடன் 2018 மார்ச் 17 வரை ணப்பந்த காலப்பகுதி நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்தத்தின் உள்ளபடியான பௌதீக முன்னேற்றம் 50 சதவீதத்தில் இருந்ததுடன் நிர்மாணத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் இடையிடையே வெள்ளத்திற்கு உட்பட்டிருந்ததுடன் மதில் சுவர் நிர்மாணத்திற்காக ரூபா 2.87 மில்லியன் மேலதிக கிரயம் அனுமதிக்கப்பட்டிருந்ததென 2018 யூன் 13 இல் செய்யப்பட்ட பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டது.

(உ) செயற்திட்டமானது செயலாற்றல் பிணை முறி பெற்றுக்கொள்ளாமல் நுவரெலியா பெருந்தோட்ட சுகாதார திட்டத்தின் கீழ் 2,595 பொதுமக்கள் அல்லது தனியார் மலசலகூடங்கள் நிர்மாணிப்பதற்கு பெருந்தோட்ட ஊழியர் கூட்டுறவுச் சங்கங்களிற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 49.54 மில்லியன் தொகை விடுவிதிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 307 மலசல கூடங்கள் நிர்மாணிப்பதற்கு ரூபா 12.28 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 37.26 மில்லியன் தொகையான 2,288 மலசல கூடங்களிற்காக ஒதக்கப்பட்ட நிதிகள் குறித்த நோக்கத்திற்காக பய்படுத்தாமல் 18 மாதங்களிற்கு மேலாக கூட்டுறவுச் சங்கங்களின் கைகளில் இருந்தது. மேலும் பெருந்தோட்ட தொழிலானர்களிற்காக மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கு 'டன்சின்னம் தோட்ட கூட்டுறவு சங்கம்' என அழைக்கபடப்பட்ட இன்னொரு கூட்டுறவு சங்கம் ஊடாக தனியார் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு ரூபா 3.30 மில்லியன் தொகையான முற்பணக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் உரிய நிர்மாணம் ரூபா 1.42 மில்லியன் பெறுமதியான வேலைகளை பூர்த்தியாக்கிய பின்னர் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சேதங்களை அறவிடுவதற்கு ஒப்பந்தகாரரிற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், 2,184 நலனாளிகள் கிளிநொச்சி சுகாதார திட்டத்தின் கீழ் சுகாதார வசதிகளை வழங்குவதற்கு கிநொச்சி மாவட்டத்தில் இனங்காணப்பட்டிருந்ததுடன் 541 மலசல கூடங்கள் நிர்மாணிப்பதற்கு அப்பகுதியிலுள்ள 09 கூட்டுறவுச் சங்கங்களிற்கு ரூபா 13.58 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 12.03 மில்லியன் கிரயத்தில் 214 மலசலகூடங்களின் நிர்மாண வேலைகள் 2018 யூன் 15 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளிற்கு மேலாக பொறியியலாளர், உள்ளக கணக்காய்வாளர், கணக்காளர் மற்றும சமூகவியலாளர் போன்ற பிரதான பதவிகள் உள்ளடங்கலாக 13 பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும் செயற்திட்டமானது 2016 மார்ச் 24 ஆந் திகதிய 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக வெளி நிறுவனங்களின் 71 ஊழியர்களை ஈடுபடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அவர்களுடைய சம்பளங்கள் மற்றும் ஏனைய படிகளாக ரூபா 13.4 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

### 3.4 முரணான கொடுப்பனவுகள்

செயற்திட்டத்திட்டத்தின் நடவடிக்கைகளுடன் நேரடியாக தொடர்புபடட நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்காத இந்தோனேசியாவில் 2017 யூன் 10 முதல் 2017 யூன் 14 வரையான காலத்தின் போது நடைபெற்ற பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டமொன்றிற்காக 10 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலிற்காக ரூபா 6.13 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.